# *Women's Perspective on War and Political Violence in Sri Lanka – A Study based on the Poetry since late 20th Centaury*

# இலங்கையில் போர் அரசியல் வன்முறை பற்றிய பெண்களின் பார்வை: இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருநது தற்காலம் வரையான கவிதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**Prof. Sitralega Maunaguru**
*Dept of Languages*
*EUSL*

மனித வரலாற்றில் மிக மோசமான பேரழிவுகளையும் மனித நினைவிலும் உணர்விலும் வலுவானதோர் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ள பல்வேறு போர்களையும் அதனுடன் இணைந்த அரசியல் வன்முறையையும் பற்றிப் பல இலக்கியங்கள் பேசியுள்ளன. தென்ஆசிய இலக்கியப் பாரம்பரியத்தின் பேரிலக்கியங்கள் எனக் கருதப்படும் இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றிலும் போர்கள் முக்கியம் பெறகின்றன.

இராமராவண யத்தம், பாரதப்போர் என்பவை சாதாரண மொழிவழக்கில் மரபுத்தொடர்களாக மாறும் அளவுக்கு அந்த யுத்தங்கள் பிரபலம் பெற்றவை.

தமிழ் இலக்கியத்தில் போர் பற்றிய கவிதைகளுக்கு ஒரு நீண்ட மரபுண்டு. சங்கப்பாடல்கள் தொடக்கம் தற்காலம் வரை இந்த நீட்சி தொடர்ந்துள்ளது. போர் பற்றிய இலக்கியங்கள் முதல் நிலையில் அதனை விவரிக்கின்றன. இக்கவிதைகளுக்கு வெவ்வேறு காலகட்டங்களில் எழுந்த வியாக்கினங்களில் பெரும்பாலானவையும் தமிழ்ச்சமூகத்தின் வீரத்தையும் வெற்றியையும் முன்னிலைப்படுத்தியே வந்துள்ளன. தமிழ்ச் சமூகம் வீரம் செறிந்த சமூகம் என்ற வகையிலேயே இப்பாடல்களைப் பயன்படுத்தி அதனைக் கட்டமைப்பும் செய்துள்ளனர். குறிப்பாக 20 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் தேசியவாதம் உருவாகியபோது இத்தகைய ஒரு கட்டமைப்பை இலக்கியச் சொல்லாடல் மயப்படுத்திப் பொதுசனப் பிரக்ஞையில் அதனைப் பதியவைத்தார்கள் இக்காலக் கவிஞர்கள். ''மறத்தமிழன், வீரத்தமிழன், போருக்கு அஞ்சாத தன்மானத்தமிழன், முறத்தால் புலி விரட்டும் தமிழ்ப்பெண், பால்மணம் மாறாப 'பாலகனைப் போருக்கு அனுப்பும் வீர மறக்குலத்துப்பெண்'' என்ற தொடர்களைப் பரவலாக்கியோர் பாரதிதாசனிலிருந்து காசி ஆனந்தன் வரை அனேகர்.

1980 களிலிருந்து தற்காலம் வரையான இந்த கால் நூற்றாண்டுக் 'காலம் இலங்கையின் தமிழ்ப்பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் அரசின் இராணுவ நடவடிக்கைகள் அதற்கு எதிரான தமிழ்த் தேசிய இயக்கங்களில் மாற்று இராணுவ நடவடிக்கைகள் அதிகரித்த காலகட்டமாகும். 1983 ஜுலையில் நிகழ்ந்த தமிழருக்கெதிரான மோசமான வன்முறை, வடக்கு கிழக்குப் பகுதிகளில் அரசுக்கு எதிரான ஆயுதத்தாக்குதல்கள், 1987 இல் இந்திய அமைதிப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான

யுத்தம், 90, 91 இரண்டாம் ஈழப்போர், 95, 2006 யத்தம் எனத் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளும் போரின் வெவ்வேறு கட்டங்களும் தொடர்ந்தன. இன்றும் தொடர்கின்றன. போரின் விளைவுகள் இலங்கை மக்கள் அனைவரையுமே வெவ்வேறுபட்ட விதத்தில் பாதித்தன.

ஒரு பகுதியினர் இன்னோர் பகுதியினர் மீது தமது கட்டுப்பாட்டையும் அதிகாரத்தையும் நிலைநிறுத்துவதற்காகப் போர் செய்கின்றனர். வளங்களைப் பங்கு போடுவதிலும் கைப்பற்றுவதிலும் ஏற்படும் முரண்பாடு காரணமாகப் போர் உருவாகிறது. இதனால் மனித சமூகங்களிடையே வளங்கள் தொடர்பான முரண்பாடுகளும் பிணக்குகளும் தோன்றும்போது ஒரு பகுதியினரை மற்றப் பகுதியனர் தமது வன்முறையைப் பிரயோகித்து அதிகாரத்தால் கட்டுப்படுத்துகின்றனர். ஆதிகாரத்தை வன்முறையால் சாதிக்க முனையும் போது போர் உருவாகிறது எனலாம். இவற்றினுடைய சாராம்சமாக ஆண்மை மையப்பொருளாகிறது. சாராம்சத்தில் போர் ஆண் மையப்பட்ட ஒரு செயலாகவும் ஆண்மை என்ற கருத்தாக்கத்தின் ஒரு வடிவமாகவும் அமைந்துள்ளது. இக்கருத்தாக்கம் போரில் ஏற்படும் மரணத்தைக் கொண்டாடுவதாக உள்ளது; வீரத்தையும் வெற்றியையும் விதந்தோதுவதாக உள்ளது. போரில் இறந்தோரை நடுகல் வைத்து வழிபடும் வழக்கத்துக்குச் சங்கப்பாடல்கள் சான்று.

இதே சமயம் போர் பற்றிய பெண்களின் எதிர்வினைகளும் போருக்குப் புதல்வர்களை அனுப்புகினற வீரத்தாய் படிமத்தை மீறி எமது இலக்கியங்களில் ஆங்காங்கு ஒலித்துக் கொண்டே உள்ளன. இந்தக் குரல்கள் சோகத்தின் குரலாக சில சமயத்தில் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் நம்பிக்கையின் குரலாக, போர் பற்றிய விமர்சனக் குரலாக, மாற்றுக்கருத்து நிலை ஒன்றை முன்வைப்பதாக, வாழ்வைக் கொண்டாடுவதாக உள்ளன. இவ்வகையில் போர்க்காலம் பற்றிய பெண்களது மன உணர்வுகளும் விசாரணையும் விமர்சனமும் இக்கவிதைகளில் இடம் பெறுவதில் வியப்பில்லை. இவற்றைப் போர் பற்றிய பெண்களின் பார்வைகளும் பதிவுகளும் என்பேன்.